கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் 18/2017

பிரிதிவாதி தரப்பு சாட்சி -1 முருகேசன் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 03.09.2024 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகேசன் | கிராமம் | |
| த/பெ / க/பெ. | ராமசாமி | தொழில் | |
| தாலுக்கா | | மதம் | |
| ஜாதி | | வயது | 39 |

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது தகப்பனார் பெயர் ராமசாமி. அவரது தகப்பனார் பெயர் வீரபத்ர ரெட்டியார். வீரபத்ர ரெட்டியார், வீரம ரெட்டியார், அக்குள் ரெட்டியார்., 1ம் பிரதிவாதி பெருமாள் ரெட்டியார் ஆகியோர் சகோதரர்கள் என்றால் சரிதான். தாவா சொத்தும், மற்றும் பிற சொத்துக்களும் மேற்படி நால்வருக்கும் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண். 800 கீழ்புறத்திலும், 820 மேல்புறம் கிராமத்திலும் உள்ளது என்றால் சதிான். சர்வே எண்.800 ல் மொத்தம் 7.42 ஏக்கர் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களை எனது பாட்டனார், அவர்களது சகோதரர்களுடன் 40 வருடங்களுக்கு முன்பு வாய்க்காரராக பாகம் பிரித்து கொண்டார் என்றால் சரிதான். அவ்வாறு பிரித்த போது சரிசமமாக பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். பெருமாள் ரெட்டியாருக்கு சர்வே எண்.800/5B பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2. மேற்படி இடம் சர்வே எண்.800 ல் கீழ்புறம் கடைசி இடம் என்றால் சரிதான். அவருக்கு அடுத்து மேல்புறம் சர்வே எண்.800/4B அக்குள் ரெட்டியாருக்கு பிரிந்த நிலம் என்றால் சரிதான். சர்வே எண்.800/5A வும், சர்வே எண்.800/5B வும் பெருமாள் ரெட்டியாருக்கு பிரிந்த நிலம் என்றால் சரிதான். சர்வே எண்.800/5B ல் பெருமாள் ரெட்டியார் தனிப்பட்ட முறையில் ஆள்துளை கிணறு அமைத்து மின் இணைப்பு

எண்.248 வாங்கியுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.800/5A அக்குள் ரெட்டியாரிடம் உள்ளதா என்றால் இல்லை. பெருமாள் ரெட்டியார் அனுபவத்தில் உள்ளது. சர்வே எண்.820/4C ல் கிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த கிணறு அக்குள் ரெட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. நால்வருக்கும் பாத்தியப்பட்டது.

3. அதில் உள்ள மின் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் வீரப்ப ரெட்டியார் பெயரில் உள்ளது. மேற்படி கிணறை நால்வரும் சேர்ந்து வங்கியில் கடன் பெற்று தான் வெட்டினார்கள் என்றால் சரிதான். வங்கியில் வீரம ரெட்டியார் பெயரில் தான் கடன் வழங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். வீரம ரெட்டியார் தான் தனிப்பட்ட முறையில் கடன் வாங்கி கிணறு வெட்டி மின் இணைப்பு பெற்றுள்ளார் என்றும், மற்றவர்களுக்கு அதில் உரிமை இல்லை என்றால் சரியல்ல. அதனால் மின் இணைப்பு வீரம ரெட்டியார் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.800/4A மற்றும் 800/3B வீரம ரெட்டியாருக்கு பிரிந்த நிலம் என்றால் சரிதான். அதை தான் நல்லம்மாள் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். சர்வே எண்.800/3A ல் நான் தனிப்பட்ட முறையில் கிணறு வெட்டியுள்ளேனா என்றால் ஆமாம்.

4. அதன் மின் இணைப்பு எண்.246 என்றால் சரிதான். சர்வே எண்.800/2D உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் நால்வரும் வீடு கட்டியுள்ளோம் என்றால் சரிதான். வடபுறம் பெருமாள் ரெட்டியார், அதற்கு அடுத்து அக்குள் ரெட்டியார், அடுத்து வீரம ரெட்டியார், கடைசியாக நாங்கள் வீடு கட்டியுள்ளோம். சர்வே எண்.800/1 என்பது வாரி என்றால் சரிதான். மேற்படி வாரி வழியாக மேற்கு நோக்கி கடைவீதிக்கு செல்லலாம் என்றால் சரியல்ல. தென்புறம் உள்ள வாரி வழியாக செல்வோம் என்றால் சரிதான். சர்வே எண்.820/7E ல் இரண்டு மின் இணைப்பு உள்ளது என்றால் சரிதான். ஒன்று அக்குள் ரெட்டியார், மற்றொன்று பெருமாள் பெயரிலும் உள்ளது என்றால் சரிதான்.

5. அக்குள் ரெட்டியார் பெயரில் உள்ள மின் இணைப்பை பயன்படுத்தி பொது கிணற்றில் இருந்து தண்ணீர் எடுத்து வீட்டிற்கு பயன்படுத்துகிறார் என்றால் சரிதான். சர்வே எண்.820/7E ல் உள்ளது பொது கிணறு. சர்வே எண்.820/7E ல் உள்ள

கிணற்றில் இருந்து பெருமாள் ரெட்டியார் நீர் எடுத்து செல்கிறாரா என்றால் பூர்வீக சொத்திற்கு மட்டும் பயன்படுத்தலாம். தனிப்பட்ட முறையில் கிரையம் வாங்கிய சொத்திற்கு பயன்படுத்த முடியாது. தற்போது யாருக்காவது தனிப்பட்ட கிரைய சொத்து உள்ளதா என்றால் இல்லை. பெருமாள் ரெட்டியார் அவருக்கு பிரிந்த சொத்துக்களை அவரது பிள்ளைகளுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளாரா என்றால் எழுதி வைத்திருக்கலாம்.

6. பெருமாள் ரெட்டியார் சார்பிலும் நான் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் ஆமாம். பெருமாள் ரெட்டியார் தனக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 08.08.2023 ல் தனது மகள்களுக்கு தானசெட்டில்மெண்ட் ஏற்படுத்தியுள்ளார் என்றால் இருக்கலாம். அதை அனுசரித்து அவர்கள் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.800/5A வை தவிர்த்து மேற்படி ஆவணம் எழுதி யுள்ளாரா என்றால் ஆமாம். வழக்கு இருப்பதால் அதைவிட்டு விட்டு எழுதியுள்ளார்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**
**Kulithalai.**